தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

S.நாகராஜன் தலைவர் | K.சந்திரசேகரன்,B.A பொதுச்செயலாளர் | B.தியாகராஜன், M.Com., நிதிச்செயலாளர்

கடித எண்: 49/19
06-03-2019

பெறுநர்,
தலைமைப் பொறியாளர் /பணிஅமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : நிர்வாகம் - பாராளுமன்றத் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன் ஊழியர்கள் தொடர்பான ஆணைகள் பிறப்பித்திட வேண்டுகோள்.

*********

பாராளுமன்றத்திற்கான தேர்தல் அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்பட உள்ளதாக அறியவருகிறோம். மேற்கண்ட அறிவிப்புகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் கீழ்கண்ட எங்களது உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று உரிய ஆணைகளை வழங்கி உதவிடுமாறு வேண்டுகின்றோம்.

**<u>I. பதவி உயர்வுகளில் வழங்கப்பட்ட வட்ட ஒதுக்கீடுகளில் மாற்றம் செய்தல்:</u>**

1. திரு.S.செல்வராஜு கணக்கீட்டாளர் மேட்டூர் வட்டம் - கணக்கீட்டாய்வாளர் பதவி உயர்வில் ஈரோடு வட்டத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டை மாற்றி மேட்டூர் வட்டத்திலேயே இருத்தி உத்திரவு வழங்குதல்.
2. திரு.K.ரமேஷ் கணக்கு மேற்பார்வையாளர் தேனி வட்டம் - உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வில் கிருஷ்ணகிரி வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாற்றி தேனி வட்டத்திலேயே இருத்தி உத்திரவு வழங்குதல்.
3. திரு.K.சீத்தாராமன் கணக்கு மேற்பார்வையாளர் சென்னை மையவட்டம் உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வில் திருவண்ணாமலை வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாற்றி சென்னை மையவட்டத்திலேயே இருத்தி உத்திரவு வழங்குதல்.
4. திருமதி.G.சரஸ்வதி கணக்கு மேற்பார்வையாளர் நாமக்கல் வட்டம் - உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வில் கோபி வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாற்றி நாமக்கல் வட்டத்திலேயே இருத்தியோ அல்லது ஈரோடு வட்டத்திற்கு மறு ஒதுக்கீடு செய்தோ உத்திரவு வழங்குதல்.

5. திருமதி.S.தேவகி -கணக்கு மேற்பார்வையாளர் கோவை வடக்கு வட்டம் அவர்களுக்கு உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வில் கோவை பொதுநிர்மான வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாற்றி கோவைக்கு அருகில் உள்ள ஏதாவதொரு வட்டத்திற்கு மறு ஒதுக்கீடு வழங்குதல்.
6. திரு.V.சிவராஜா- வருவாய் மேற்பார்வையாளர் கோவை பெருநகர் வட்டம் - வருவாய் மேலாளர் பொறுப்பிலிருந்து மதிப்பீட்டு அலுவலர் பொறுப்பிற்கு விடுபட்டுள்ள பதவி உயர்வு உத்திரவினை வழங்கி கோவை பெருநகர் வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தல்.
7. திரு.C.பழனிச்சாமி – வருவாய் மேற்பார்வையாளர் சேலம் வட்டம் மதிப்பீட்டு அலுவலர் பதவி உயர்வில் விழுப்புரம் வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாற்றி சேலம் வட்டத்திலேயே இருத்தி உத்திரவு வழங்குதல்.

**II. விருப்ப ஊர்மாறுதல் உத்திரவுகள் வழங்குதல்:**

1. திரு.K.ஜெயராமன் கணக்கு மேற்பார்வையாளர் கிருஷ்ணகிரி வட்டம் - மேட்டூர் வட்டத்திற்கு விருப்பமாறுதல் கோரியுள்ளதை ஏற்று மாறுதல் உத்திரவுகள் வழங்குதல்.
2. திரு.S.ஜானகி கணக்கு மேற்பார்வையாளர் திருப்பூர் வட்டத்திலிருந்து கோபி மின்பகிர்மான வட்டம் மாறுதல் வேண்டி விண்ணப்பித்துள்ளார். இவருக்கு கோபி மின்பகிர்மான வட்டம் மாறுதல் வழங்குதல்.
3. திரு.K.சரவணக்குமார் கணக்கீட்டாளர் பல்லடம் மின்பகிர்மான வட்டம் உடுமலை வட்டத்திற்கு மாறுதல் வேண்டி விண்ணப்பித்துள்ளார். இவருக்கு உடுமலை வட்டத்திற்கு மாறுதல் வழங்குதல்.
4. திரு.A.செல்வம் கணக்கீட்டாளர் பல்லடம் மின்பகிர்மான வட்டத்திலிருந்து தேனி மின்பகிர்மான வட்டம் மாறுதல் வேண்டி விண்ணப்பித்துள்ளார். இவருக்கு தேனி வட்டம் மாறுதல் வழங்குதல்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல் : 1. உதவிப் பொதுச்செயலாளர் /சென்னை.
2. அமைப்புச் செயலாளர் /மேட்டூர்.
3. தலைவர் /கோவை.